உதகமண்டலம் மாவட்ட நீதிமன்றத்தில் **2026–ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் 14–ஆம் நாள்** பிரதிவாதி என்பவரின் சாட்சியாகிய பி.**சா.2**–ன் வாக்குமூலம் 1969–ஆம் ஆண்டு 44வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| O.S. No | : 85 of 2024 |
| பெயர் | : ராமசந்திரன் |
| தந்தை பெயர் | : பாம்பாகௌடர் |
| வயது | : 75 |
| தொழில் | : வியாபாரம் |
| கிராமம் | : ஊட்டி |
| தாலுக்கா | : ஊட்டி |

---

தேதி : 14.07.2026.

<u>பி.**சா.2 ராமசந்திரன் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, விசாரணை செய்யப்படுகிறார்**</u>:

**<u>முதல் விசாரணை</u>**:

நான் ஊட்டியில் வசிக்கிறேன். நான் இன்று தாக்கல் செய்யும் என் நிருபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நன்கு தெரிந்து கையொப்பமிட்டுள்ளேன், அதை என் சாட்சியமாக ஏற்க வேண்டுகிறேன்.

என்னுடைய ஆதார் அடையாள அட்டை உண்மை நகல்– **பி.சா.ஆ–2,**

என்னுடைய கடைக்கு வழங்கப்பட்ட உரிமம் உண்மை நகல்– **பி.சா.ஆ–3,**

**<u>குறுக்கு விசாரணை</u>** :

எனக்கு தமிழ் நன்கு எழுத, படிக்க தெரியும், ஆனால் ஆங்கிலம் ஓரளவிற்கு எழுத, படிக்க தெரியும். என்னுடைய

கலைமகள் ஏஜென்சிஸ் என்ற கடை இவ்வழக்கு 2ஆம் பிரதிவாதியின் கடையை ஒட்டி அமைந்துள்ளது என்பது சரி. நான் என் கடையை 15 வருடமாக நடத்திவருகிறேன். மனோகரன் அவரது கடையை அங்கு எனக்கு முன்பிருந்தே நடத்தி வருகிறார். 2ஆம் பிரதிவாதி மனோகரனும் விதை வியாபாரம் செய்து வந்தார். தற்பொழுது என் கடையையும், அவர் கடையையும் மார்க்கட்டில் இடித்துவிட்டார்கள், நான் மட்டும் என் கடையை வேறு இடத்தில் நடத்தி வருகிறேன். மனோகரனுக்கும் மார்க்கட்டில் ஊட்டி ரேஸ்கோர்ஸ்சில் கடை வைத்துக்கொள்ள மாற்று ஏற்பாடு செய்து கொடுத்துள்ளார்கள். அங்கு வியாபாரம் இல்லை என்பதால் நானும், 2ஆம் பிரதிவாதியும் எங்களுக்கு மாற்று ஏற்பாடாக கொடுத்த கடைகளை சுவாதீனம் எடுத்துக் கொண்டாலும் அந்த கடைகளை திறக்காமல் இருக்கிறோம். நான் என் பிரமாண வாக்குமூலத்தில் விதை வியாபாரம் தற்பொழுது செய்து வருவதாக தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் கடை எனக்கு வழங்கப்பட்டுள்ளதால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன்.

நானும், 2ஆம் பிரதிவாதி மனோகரனும் உறவினர்கள் என்பது சரி. என்னை இன்று நீதிமன்றத்திற்கு 2ஆம் பிரதிவாதி அழைத்து வந்துள்ளார் என்றால் இல்லை, 2ஆம் பிரதிவாதியின் வழக்கறிஞர் சொன்னதால் நான் இன்று நீதிமன்றம் வந்தேன். ஆங்கிலத்தில் உள்ள என் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் சொன்னதை வழக்கறிஞர் படித்து காட்டியதால் அதை தெரிந்து கொண்டேன். அந்த பிரமாண வாக்குமூலத்தை 2ஆம் பிரதிவாதியின் வழக்கறிஞர் தயார் செய்தார் என்பது சரி, நான் சொல்லி அவர் தயார் செய்தார்.

15.06.2015 அன்று நானும், மனோகரனும் அவரது கடையில் இருந்தபோது பகல் சுமார் 11.00 மணியளவில் குணசேகரன் என்பவர் அங்கு வந்தார். அவர் கடைக்கு அடிக்கடி குணசேகரகன் வந்ததால் எனக்கு குணசேகரனை தெரியும். அப்பொழுது

குணசேகரன் தான் ஒரு இடத்தை ஒரு ஸ்ரீதர் என்பவருக்கு விற்றுள்ளதாகவும், தான் வெளியூரில் இருந்ததால் அதற்காக தான் முதலில் வாங்கிய பணம் போக மீத பணத்தை மனோகரனிடம் கொடுக்க சொல்லியிருப்பதாகவும், அதை தான் இன்று வாங்க வந்துள்ளதாகவும் சொன்னார். அதற்கு ரசீது போன்று ஒன்று எழுதலாம் என்றும் குணசேகரன் சொன்னார். அந்த ரசீதை எழுதியபிறகு மனோகரனிடம் ரூபாய் 10,00,000/- பணத்தை குணசேகரன் வாங்கினார். அதை நான் எழுதி சாட்சியாகவும் நான் கையொப்பமிட்டேன். அதில் அதை நான்தான் எழுதியாக குறிப்பு எழுதியுள்ளேனா என்றால் இல்லை.

வாதி ஸ்ரீதருக்கும், 1ஆம் பிரதிவாதி குணசேகரனுக்கும் இடையே எப்போது கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டது என்பது எனக்கு தெரியாது. அந்த கிரைய ஒப்பந்தம் பற்றி நான் எழுதிய ரசீதில் குறிப்பிடப்பட்டது, ஆனால் அந்த விவரம் எனக்கு தற்பொழுது ஞாபகம் இல்லை. எந்தெந்த தேதிகளில் எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது என்ற விவரத்தையும் அந்த ரசீதில் எழுதினேன், ஆனால் அந்த விவரங்கள் தற்பொழுது எனக்கு ஞாபகம் இல்லை. மனோகரன் எந்தெந்த தேதிகளில் எவ்வளவு தொகை ஸ்ரீதரனிடம் வாங்கினார் என்ற விவரத்தையும் அந்த ரசீதில் எழுதினேன், அது மொத்தம் ரூபாய் 10,00,000/- என்பது மட்டும் தெரியும், மற்ற விவரங்கள் ஞாபகம் இல்லை. அப்பொழுது மனோகரன் தனது கடையில் அந்த பணம் ரூபாய் 10,00,000/-ஐ ரொக்கமாக வைத்திருந்தார். 1ஆம் பிரதிவாதி அன்றைய தினம் மனோகரன் கடைக்கு வருவார் என்ற விவரம் எனக்கும், மனோகரனுக்கும் ஏற்கனவே தெரியுமா என்றால் எனக்கு அவர் வரும் விவரம் தெரியாது.

குணசேகரன் எனக்கு உறவினர் அல்ல. குணசேகரன் சுமார் 2 வருடங்களாக மனோகரன் கடைக்கு வந்து சென்ற வகையில் எனக்கு குணசேகரனை தெரியும். குணசேகரன் அன்றைய தினம்

மனோகரன் கடைக்கு வரும்போது எங்களுடன் வேறு ஒருவரும் கடையில் இருந்தார். அவர் பெயர் சுப்ரமணியம். எங்கள் கடையில் இருந்து சற்று தள்ளி சுப்ரமணியம் கடை வைத்துள்ளார். சுப்ரமணியம் என் ஊரான நஞ்சநாட்டை சேர்ந்தவர். சுப்ரமணியம் எனக்கு உடன் பிறந்த சகோதரர். அன்று குணசேகரன் அவ்வாறு மனோகரன் கடைக்கு வருவதற்கு முன்பே சுப்ரமணியமும் அந்த கடையில் இருந்தார். நான் எழுதிய அந்த ரசீதில் சுப்ரமணியம் முதலில் கையொப்பம் போட்டார், பிறகு நான் அதில் கையொப்பம் போட்டேன். குணசேகரன் கையொப்பம் போட்டபிறகு நாங்கள் இருவரும் அவ்வாறு கையொப்பம் போட்டோம். அதில் எங்களை தவிர வேறு யாரும் கையொப்பம் போடவில்லை என்பது சரி.

உண்மையில் 15.06.2015 அன்று 1ஆம் பிரதிவாதி அவ்வாறு 2ஆம் பிரதிவாதியின் கடைக்கு வரவோ 2ஆம் பிரதிவாதியிடம் ரூபாய் 10,00,000/- பெறவோ அதற்கு நான் ரசீது எழுதவோ அதில் 1ஆம் பிரதிவாதி கையொப்பம் இடவோ இல்லை என்றும், 1ஆம் பிரதிவாதியும், நானும் என் சகோதரர் சுப்ரமணியமும் 2ஆம் பிரதிவாதியின் உறவினர்கள் என்பதால் அவ்வாறு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் தவறு. 15.06.2015 அன்று 2ஆம் பிரதிவாதிக்கு ரூபாய் 10,00,000/- தொகை கொடுக்க கூடிய அளவிற்கு வசதி இல்லை என்றால் தவறு, 2ஆம் பிரதிவாதியிடம் கொடுத்திருந்த பணத்தைதான் அவர் அவ்வாறு கொடுத்தார்.

A. Muraleedharan

Digitally signed by A. Muraleedharan
Date: 2026.07.14 17:30:10 +0530